கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட்/இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2014/2015 (டிசெம்பர் 2017)

# FAS 3243 Indigenous Art Tradition of Eastern Sri Lanka

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி–I இல் இருந்து இரு வினாக்களுக்கும் பகுதி-II இல் இருந்து மூன்று வினாக்களுக்கும் மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.

## பகுதி–I

01. (i) பண்பாட்டு கலப்பு என்றால் என்ன? விளக்குக.
(10 புள்ளிகள்)

(ii) பண்பாட்டு கலப்பு பழங்குடியினரின் கலைச் செயற்பாட்டில் ஏற்படுத்திய பாதிப்புக்களைத் தருக.
(10 புள்ளிகள்)

02. (i) சடங்குடன் தொடர்புடையதாக பயிலப்படும் கிழக்கிலங்கையின் சில நடனங்களைத் தருக.
(10 புள்ளிகள்)

(ii) இந்நடனங்களில் இரண்டு நடனங்களின் ஆற்றுகை அழகியலைத் தருக?
(10 புள்ளிகள்)

03. (i) இலங்கையில் வாழும் பழங்குடியினரின் இழப்புக்குக் காரணமான சமூக, பொருளாதார அரசியல் காரணிகள் யாவை?
(10 புள்ளிகள்)

(ii) அடையாள இழப்பு அவர்களின் கலைச் செயற்பாட்டில் எவ்வாறான பாதிப்புக்களை ஏற்படுத்தியது என்பதை ஆராய்க.
(10 புள்ளிகள்)

## பகுதி–II

04. இலங்கையில் வாழும் குறவர்களிடம் வழங்கும் இசை, நடன மரபுகளை அலிக்கம்பை அல்லது காஞ்சிரங்குடாவில் வாழும் குறவர்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

(20 புள்ளிகள்)

05. மட்டக்களப்பில் வாழும் வேடர்களின் கைப்பணி மரபு பற்றி விளக்குக.

(20 புள்ளிகள்)

06. பழங்குடியினரின் கலையின் இயல்பைத் தந்து, அது இலங்கையில் வாழும் பழங்குடியினரின் கலைச் செயற்பாட்டுடன் எவ்வாறு தொடர்புடையதாக விளங்குகிறது என்பதை ஆராய்க?

(20 புள்ளிகள்)

07. இலங்கையில் வழங்கும் புலிக்கூத்து வேடர்களின் இனத்துவ அடையாளத்தைப் பிரதிபலிக்கும் ஒரு நடனமாகக் கொள்ள முடியுமா? காரணம் தந்து விளக்குக.

(20 புள்ளிகள்)

*****